Judicial Form No.53
(see Rule 42)
DEPOSITION OF WITNESS
Chapter XXIII Code of Criminal Procedure
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

C.C. No:- 216/2014 Date:- 12.08.2026

Deposition of witness for prosecution :- PW :-6

| | | | |
|---|---|---|---|
| Name | சௌந்தர்ராஜன் | Age | |
| Father/Husband Name | | Taluk | |
| Village | | | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act 1969 | | | |

சாட்சி Video Conference மூலமாக இன்று ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் நிலை விசாரணை:-**

1. நான் தற்போது நீலகிரி மாவட்டத்தில் கூடுதல் கண்காணிப்பாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு 2013-ம் ஆண்டு சத்தியமங்கலம் காவல் ஆய்வாளராக பணியாற்றிய போது கூடுதல் பொறுப்பாக புளியம்பட்டி காவல் நிலையத்தில் கூடுதல் பொறுப்பாக இருந்த போது 23.12.2013-ம் தேதி புளியம்பட்டி காவல் நிலைய குற்ற எண்.383/2013 457,380 இ.த.ச ன் கீழ் வழக்கில் நான் புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு எதிரிகளை கண்டுபிடிக்க வேண்டி புங்கம்பள்ளி பாட்சாமல்லூர் பிரிவில் வாகன தணிக்கையில் இருந்தேன்.

2. போலீஸ் பார்டியுடன் வாகன தணிக்கையில் இருந்தபோது மேற்படி வழக்கில் மேற்கில் இருந்து கிழக்கே நோக்கி வந்த புளூ கலர் சி.டி 100 வண்டியான TN 36 AJ 8285 என்ற வாகனத்தை நிறுத்த முற்பட்டபோது மேற்படி வாகனத்தை ஓட்டி வந்தவரை திரும்பி சென்றவரை போலீஸ் பார்டியுடன் பிடித்து விசாரித்தேன்.

3. அப்போது அவர் தனது பெயர் வேலன் (எ) வேலுச்சாமி என்றும், தான் பழைய குற்றவாளி என்றும், புளியம்பட்டி காவல் நிலைய வழக்கு 383/2013-ன் திருட்டு சம்பவத்தில் ஈடுபட்டதாக ஒப்புக்கொண்டார்.

4. பின்பு அவரை நான் கைது செய்து சாட்சிகள் பொன்னுசாமி மற்றும் பிராபகரன் ஆகியோர்கள் முன்னிலையில் எவ்வித அச்சுறுத்லோ துன்புறுத்தலோ இன்றி தாமாக

முன்கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தாங்கள் என்னை கூட்டிச்சென்றால் ஒரு பெண்ணிடம் நகை பறித்த இடத்தையும் வீட்டிற்குள் புகுந்து திருடிய வீட்டையும் அடையாளம் காட்டுகிறேன் என்று கூறினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. மேலும் மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் எதிரி இவ்வழக்கில் திருடியதாக கூறி தன்னிடம் இருந்த சுமார் 29.290 எடையுள்ள தங்க செயினை . அதே சாட்சிகள் பொன்னுசாமி, பிராபகரன் முன்னிலையில் 23.12.2013–ம் தேதியன்று மாலை 13.45 மணிக்கு கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**6.** எதிரி மற்றும் சொத்துகளுடன் நிலையம் புளியம்பட்டி காவல் நிலையம் வந்து நிலைய ஆவணங்களில் பதிவு செய்தும், எதிரிகளின் உறவினர்களுக்கு தகவல் தெரிவித்தும், தகுந்த வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். வழக்கின் சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 **அ.சா.ஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

7. இவ்வழக்கில் கைப்பற்றிய சொத்தை வாதிக்கு அடையாளம் காட்டியும், சாட்சிகள் பிராபகரன், பொன்னுசாமி ஆகியோர்களுடன் வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கு கோப்புகளை புளியம்பட்டி காவல் ஆய்வாளர் தங்கவேல் என்பவர் பணியில் சேர்ந்தவுடன் ஒப்படைத்துவிட்டேன்.

**<u>குறுக்கு விசாரணை:–</u>**

1. நான் சொன்ன நாள் மற்றும் இடத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கூறிய ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் முன்னிலையில் எவ்விதமான ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் நான் எவ்விதமான பொருட்களையும் எதிரியிடமிருந்து கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை –</u>** இல்லை.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என்முன் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்துப்பார்த்து/விளக்கி கூறி சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர்,
சத்தியமங்கலம்.